# மத்திய மாகாண சபையின் ஆயுர்வேத திணைக்களத்தின் மேலாண்மை உதவி தொழில்நுட்பத் தொகுதி 2 ஆயுர்வேத மருந்தாளுநர் பதவித் தரம் III இற்காகத் திறந்த அடிப்படையில் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல்

மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் மேலாண்மை உதவி தொழில்நுட்பத் தொகுதி 2 (MT 02 -2025) ஆயுர்வேத மருந்தாளுநர் பதவித் தரம் III இற்குத் திறந்த அடிப்படையில் நியமிக்கப்படுவதற்காகத் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி 2026.10.02 ஆகும்.

02. மத்திய மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2019.09.04 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் மேலாண்மை உதவி தொழில்நுட்பத் தொகுதி 2 சேவைப் பிரிவின் ஆயுர்வேத மருந்தாளுநர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மற்றும் பதவி உயர்த்துவதற்கான திட்டத்தின் 7.2.2 ஆம் பிரிவின் விதந்துகாப்புகளுக்கு அமைவாக 2026.01.27 ஆம் திகதியன்று 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்ட பின்வரும் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

03. 02 **பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுவதுடன் இப்பதவியானது நிரந்தரமானது மற்றும் ஓய்வூதிய உரிமையுடையது. அரச நிருவாக சுற்றறிக்கை** 10/2025 **இற்கு அமைவாக இப்பதவிக்குரிய சம்பளக் குறியீடு மற்றும் சம்பளத் திட்டம் பின்வருமாறு அமையும்**:
MT 02 - 2025, 50630 – 10 X 630 – 11 X 670 - 10 X 1010 – 10 X 1190 – 86300/=

(i) கல்வித் தகுதிகள் - கணிதம், சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் (Credit) ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.
மற்றும்
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையில் விஞ்ஞானப் பாடத்துறையில் அனைத்துப் பாடங்களிலும் (பொதுச் சாதாரண பரீட்சை தவிர்ந்து) சித்தியடைந்திருப்பதுடன் மூன்றாம் நிலைக்கல்விப்

பாடநெறியொன்றைப் பயில்வதற்குத் தேவையான தகைமை மட்டத்தைப் பெற்றிருத்தல்.

(ii) தொழில்சார் தகுதிகள் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட ஈரண்டு (02) வருடஆயுர்வேதமருந்தாளுநர்பாடநெறியைப்பயின்றுசான்றிதழ்பெற்று ஆயுர்வேத மருத்துவ சபையில் ஆயுர்வேத மருந்தாளுநராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) அனுபவம் - பொருந்தாது.

(iv) உடற்தகுதி - ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மத்திய மாகாணத்திற்குள் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடலியல் மற்றும் மனவியல் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(v) ஏனையவை -

i. இலங்கைப்பிரிஜையாக இருத்தல் வேண்டும்.
ii. விண்ணப்பதாரிகள் நற்பண்பு உடையவராக இருத்தல் வேண்டும்.
iii. மத்திய மாகாணத்திற்குள் உடனடியாக முந்தைய 03 ஆண்டுகள் நிரந்தர வசிப்பிடத்தை உறுதிப்படுத்த வேண்டும் (வசிப்பிடச் சான்றிதழ் மூலம்).
iv. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காகத் தேவையான அனைத்துத் தகுதிகளும், அத்தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் எனக் விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில்/வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்படும் திகதிக்கு அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

03. ஆட்சேர்க்கும் முறை -

(i) தொழில்சார் பரீட்சை மற்றும் புள்ளியிடப்பட்ட நேர்முகப் பரீட்சை என்பவற்றின் மூலம் பெறப்படும் புள்ளிகளின் புள்ளிச் சுருக்க வரிசைக்கு அமைவாக நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

(ii) தொழில்சார் பரீட்சை - ஆயுர்வேத ஔடத உற்பத்தி, களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகத்திற்காக ஔடத வகைகளைப் பெற்றுக்கொள்ளல், உரிய உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பகிர்ந்தளித்தல், கணக்கு வைத்தல்

ஆகிய பாடங்களை உள்ளடக்கியதாக அமையும்.

(iii) விண்ணப்பங்கள் கோரும் முறை - விளம்பரத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தின் மாதிரிக்கு அமைவாகத் தயாரித்த விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து 2026.10.02. ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளர், த.பெ. எண் 121, மத்திய மாகாண சுகாதார அமைச்சு, சங்கராஜ மாவத்தை, கண்டி எனும் முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பக் கடித உறையின் மேல் இடது மூலையில் "மத்திய மாகாண சபையின் ஆயுர்வேத திணைக்களத்தின் மேலாண்மை உதவி தொழில்நுட்பத் தொகுதி 2 ஆயுர்வேத மருந்தாளுநர் பதவிக்குத் திறந்த அடிப்படையில் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

திகதி 2026.09.11

ஜெகத் அதிகாரி
செயலாளர்
சுகாதார, சுதேசிய வைத்திய, சமூக நலன்புரி,
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் அமைச்சு
மத்திய மாகாணம்